

# பாலியர் நேசன்.

நானே நல்ல மேய்ப்பன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள்.

௯ம் புத்தகம்.] யாழ்ப்பாணம் ௲௮௱௬௬ம் ஹு தை மீ. இதன்விலை வருஷம் ஒன்றுக்கு, அரை ரூபாய். [சங்கியை ௧.

## பத்திரத்தின் விலை.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒரு பிரதிவாங்குவார்க்குவிலை | | | சி. | ௧ |
| ஒரேமுறையில் ௧௦ | " | " | " | ௯ |
| ௨௦ | " | " | " | ௧௭ |
| ௨௫ | " | " | " | ௨௧ |
| ௫௦ | " | " | " | ௪௦ |
| ௧௦௦ | " | " | " | ௭௫ |

தபாற்செலவு பிறம்பாய்வரும்.

## SUBSCRIPTIONS FOR 1865.

| | | |
|---|---|---|
| Rev. F. Asbury | 1 | 0 |
| Mr. R. Breckenridge | 1 | 0 |
| " W. Lyman | 1 | 0 |
| " N. Strong | 1 | 0 |
| " Alfred Catechist | 1 | 6 |
| J Somanader Modr. | 1 | 6 |
| Mr. C. W. Appookooty | 1 | 0 |

## வருஷப்பிறப்பு.

௲௮௱௬௫ம் வருஷம் இறந்தகாலத்தோடு சேர்க்கப்பட்டது. ௲௮௱௬௬ம் வருஷம் உங்களை மினவி உதித்தது. நம்மை மீட்ட இரட்சகரின் காலத்தை இது நினைப்பூட்டுகின்றது. இன்றைக்கு மெய்க்கிறிஸ்தவர்களுக்கும் பேர்க்கிறிஸ்தவர்களுக்கும் இது விசேஷித்ததினம். தேவபத்தர் தங்கள் கீர்த்தனைகளையும் ஸ்தோத்திரங்களையும் விண்ணப்பங்களையுந் தேவனுக்குச் செலுத்திக் கர்த்தர் நல்லவரென்றறிக்கையிட்டு தங்கள் உற்றார் உறவர் மித்திரர் புத்திரர் என்பவர்களைச் சந்தோஷிப்பித்திருப்பார்கள். மற்றவர்கள் தங்கள் வஸ்திர ஆபரணாதிகளிலும் உண்பனவு பருகுவன முதலியவைகளிலும் இன்பங்கொண்டிருப்பார்கள். வருஷப்பிறப்பைப்பற்றித் தேவபுத்திரரும் நரபுத்திரருங் கொண்டிருக்குங் கருத்துகளை அவரவர்கிரிகையால் அறியவும். ஆவியின்கனிகளும் மாமிசத்தின் கனிகளுந் தோற்றப்படும். ஆவிக்குரிய கிரிகைக்காரர் கிறிஸ்துவின் பிள்ளைகள். மாமிசக்கிரிகைக்காரர்பசாசின்பிள்ளைகள். இன்னும் ௫௨ வாரத்தில் இவ்வருஷமுமிறந்துபோமென்பதை நினையுங்கள். சென்றவருஷத்திலும் இந்தவருஷம் எங்களுக்கு மரணங்கிட்டிவிட்டதென்றெண்ணுங்கள். புதுவருஷம் என்று சந்தோஷிக்கையில் புதியெருஷலேமுங்கிட்டிவிட்டதென்றுசந்தோஷிப்பீர்களா? பிள்ளைகளே புதுவருஷத்திலும் புது இருதயத்தை விரும்புங்கள்.

## தைமாதம்.

தைமாதத்துக்கு இங்கிலிஸ்ப்பாஷையில் யன்னுவரி (January) என்று பேர். யனுஸ்(Janus) என்னும் ரோமதேவதையின் நாமப்படியிடப்பட்டது. ஐறிஷ் உருசியன் பாஷைகளில் துவக்கம் என்னுங் கருத்துள்ளதாயிருப்பதால் முதலாம்மாதத்தைக் குறிக்கின்றது. கிறிஸ்தவர்கள் இந்த மாதத்தையே தங்கள் வருஷப்பிறப்பாகக்கொள்ளுகிறார்கள். சைவர் முதலியவர்கள் தைப்பிறப்பிற் சூரியனுக்குப் பொங்கல்செய்து அவர் தயவைக் கேட்டுநிற்கிறார்கள். தேவனை நமஸ்கரிப்பதோ அவர் சிருட்டியை நமஸ்கரிப்பதோ எதுசரி. இம்மாதத்தில் உத்தரத்திற்குச்செல்லும்படி மகரராசியிற் சூரியன் நிற்கிறதாகத் தோற்றுகின்றது. தைப்பூசத்தில் சுப்புரமணியனுக்கு குறித்த ஸ்தலங்களில் காவடி எடுத்துத் திருவிழாக்கொண்டாடி "தைப்பூசமாடத்தகுந்தோருமென்றவன்" என்று கொண்டாடுவார்கள். இது ஒரு பெரிய மடமை. சுவாமி விளையாடுவாரா? நினைத்துப்பாருங்கள். புதிர் உண்பார்கள். பேய்களைநோக்கிப் பிரார்த்தித்துப் புதிருண்ணுதலோ தேவனைநோக்கிப் பிரார்த்தித்துப் புதிருண்ணுதலோ உத்தமம். தைப்பிறை, வருஷம் செழிக்குமோ பஞ்சப்படுமோவென்று காட்டக்கூடிய சத்துவிருந்தால் தேவன் எங்கே? செழிப்புக்காலத்தையும் வறப்புக்காலத்தையும் பிறையல்ல, தேவனே வரப்பண்ணுகிறவர். ஆகையால் தேவனை நோக்குங்கள். தைப்பிறைபோன்ற மனமுள்ளவர்களாகத் தேவனுக்குஞ் சனங்களுக்கும் ஏற்க நடவுங்கள்.

## குழந்தைகள் நேசன்.

குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள், தடைபண்ணாதிருங்கள், பரமஇராச்சியம் அப்படிப்பட்டவர்களுக்கே உரியது. பிள்ளைகளே, பாருங்கள் எவ்வளவு இன்பமான அழைப்பும், வாக்கும. இது ஆரால் சொல்லப்பட்டது? நம்போலிய பாவம்நிறைந்த மனுஷராலா? இல்லை, உங்கள் பெற்றாரைப் பார்க்கிலும் அதிகமாய் உங்களை நேசித்து வருபவராகிய ஒருவராலேயே. அவர் ஆர்? யேசுக்கிறிஸ்து.

பிள்ளைகளே, இப்போ இந்த இரட்சகர் எங்கே? உங்களுக்குத் தூரமாய்ப் போய்விட்டாரா? இல்லை, அவர் வானத்துக்கெழுந்தருளிப் போனாலும், தெய்வீகத்தின்படி உங்களுடனே இருக்கிறார். நீங்கள் செய்து, சொல்லி, நினைத்துவருகிற யாவையுங் காண்கிறார். அவருக்கொன்றும் மறைவல்ல. எந்த இருளிலுங் காண்பார். ஆனால் பிள்ளைகளே, அவர் பொல்லாதபிள்ளைகளுடனும் கூட இருப்பாரா? அவர்களுடன் கூடஇருந்தாலும், அப்படிப்பட்ட பிள்ளைகளை நேசிக்கமாட்டார். பொய், களவு செய்யாமல், இராசா, குரு, உவாத்தி, பெற்றார் முதலிய பெரியோருக்குக் கீழமைந்து, தாழ்மையான பிள்ளையாய் நடக்கிறபிள்ளைகளை நேசிக்கிறார். உங்களில் எத்தனைபேர் பரம இராச்சியத்துக்கு உரித்தாளிகளாய்வர விரும்புகிறீர்கள். அப்படிவர விரும்பினால், யேசுக்கிறிஸ்து உங்களையும் அழைக்கும் அழைப்பைக் கேளுங்கள். குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள் என்ற இரட்சகர் உங்களை அணைத்து ஆசீர்வதிக்கும்படி தமது கரங்களை விரித்துக்கொண்டு நிற்கிறார். ஆகையால் அவரிடம் மனந்திரும்பிப் போங்கள், உங்கள் இருதயங்களை முற்றாய் ஒப்புவியுங்கள், அப்போ இரட்சிக்கப்பட்டு மோட்சத்திற் சேருவீர்கள். நீங்கள் குணப்படாதவர்களாய் மரித்தால், பிசாசானவனுக்காகவும் அவனுடைய தூதருக்காகவும் ஆயத்தப்படுத்தப்பட்டிருக்கிற நரகத்திற் தள்ளப்படுவீர்கள். தேவவசனத்தின்படி நடக்கிறபிள்ளைகளாயிருந்தால் யேசு இரட்சகர் தம்மிடத்தில் உங்களைச் சேர்த்துக்கொள்வார். உங்களைப்போல அனேக சின்னப்பிள்ளைகளைச் சேர்த்துக்கொண்டார் அவ்விதமே நீங்களும் சீக்கிரம் அழைக்கப்படுவீர்கள். ஆகையால் நீங்கள் உங்கள் பரமபிதாவிடம்போய், யேசு இரட்சகர்நிமித்தம் ஏழைப்பிள்ளையாகிய என்மேல் இரங்கி என் பாவங்களை மன்னித்துக்கொண்டு என்னை உமது சொந்தப்பிள்ளையாக ஏற்றுக்கொள்ளுமென்று தாழ்மையுடன் கேளுங்கள், அவர் உங்கள் வேண்டுதலை அங்கீகரிப்பார்.

## மறதி.

சில தருணங்களில் சிலர் ஒருகாரியத்தைச் செய்கையில் பின்னொருகாரியத்தை நினைக்கிறார்கள். பேர்பெற்ற தத்துவசாஸ்திரியாகிய நியூற்றன் என்பவர் வானசோதிகளைப்பற்றித் தன் கவனத்தைச் செலுத்திவந்ததினால் பொதுவானகாரியங்களைக்குறித்து அரிதாக நினைக்க இடமிருந்தது. ஒருநாள் ஒரு துரைசானியைக்காணும்படி இவர் போய் தீமூட்டியசாலையில் அவளுடன் உட்கார்ந்து தனது சுங்கானிற் புகைகுடிக்கும்பொழுது தத்துவசாஸ்திரத்தைப்பற்றிய கணிதங்களில் தன்மனதைச் செலுத்தினதால் தான் செய்வது இன்னதென்று தெரியாமல் துரைசானியுடைய விரலைப்பிடித்து சுங்கானின்வாயிலுள்ள நெருப்பை அமர்த்தினார்.

ஒரு துரைசானி மூக்கிற் கண்ணாடியைக் காணாமல் எவ்விடத்திலிருக்கிறதென்று கண்டுபிடிக்கும்படி தன் அறைகள் பெட்டிகள் அலுமாரிகளெல்லாம் பார்த்துக் காணாமல் ஈற்றில் தன்மூக்கின்மேற் செவ்வையாக இருக்கக்கண்டாள்.

ஸ்கொத்திலாந்துதேசத்தின் எட்டின்பேர்க்கு நகரியில் வாசமாயிருந்த ஓர்விருத்தாப்பிய துரைசானி மிகுந்த கரிசனையுடன் பன்றிக்குட்டி ஒன்றைத் தன்மடியில்வைத்து வளர்த்துவருவாள். அதற்குக் குடல்வலியிருந்ததினால் விடாப்பூட்டாய்க்கீச்சிடும். வியாதிகொண்டதினால் துரைசானியும் மிகவும் அன்பாகப் பராமரித்துவருவாள். இவள் கல்வி விஷயங்களிற் சற்றுமுயற்சியுள்ளவளாகவிருந்ததினால் அவள் மனது அக்காரியத்திற்செல்வதினால் தான் எவ்விடத்திலிருக்கிறதென்றும் என்னசெய்கிறதென்றும் அறியாமலிருப்பாள்.

ஒருநாளாகிறபோது பன்றிக்குட்டியையுங் கமுக்கட்டுக்குள் இடுக்கிக்கொண்டு குட்டியும் வாடிக்கைபோற் கீச்சிட அ[illegible]வீட்டுக்காரி[illegible]ன்வாயிலிற்சென்று கலக்கமுள்ளவளாக[illegible], காலவர்த்தனம் இருவருஞ் சொல்லிய[illegible]மேல், உம்மைக் காணும்படி ஒருகாரியத்தையிட்டுவ[illegible]

தேன். அந்தக்காரியத்தை மறந்துவிட்டேன் என்க, அதேத்தவீட்டுக்காரி அதென்ன, அதென்ன சொல்லுமென்க, துரைசானி ஆம்; இல்லை கெட்டபன்றியே போறு, அமைதியாயிரு, என்னை நினைக்கவிடு என்றுசொல்லி இப்பொழுதான் நினைத்தேன், என்பன்றியைக் கண்டீரா என்றான். மற்றவன் உமது சமுச்சட்டுக்குன் என்ன? என்க, ஆ! இவ்வளவும் என் சமுக்கட்டுக்குள் பன்றியை வைத்துக்கொண்டு எங்குந் தேடித்திரிந்தேனே. என் பெரியதாய் எனக்குச் சொன்னகதை ஒன்று இப்பொழுது நினைவில்வருகிறது. வாஷிங்தன் என்னும் நகரத்தில் தோமாஸ் லா (Thomas Law) என்ற பேருள்ள ஒருதுரைமகனிருந்தார். அவர் மிக மறதிக்காரன். தன்முதற்பேரைப் பெரும்பாலும் மறந்துபோகிறவர். ஒருநாள் ஒருகாகிதம் எழுதி முடிவில் தனது கையெழுத்தை வைக்கப்போனவேளையில் முதற்பேரை மறந்து நெடுநேரமாக அலைவுகொண்டிருக்கையில் வாயில்காப்போன்பக்கலாகப் போவதைக்கண்டு கிளக்ஸ்தன் (Claxton) உன் முதற்பேரென்னவென்றார். அவன் தோமாஸ் என்க, ஆம் ஆம், தோமாஸ் லாவென்று கையெழுத்துவைத்தார்.

மேற்சொல்லியபிரகாரம் பிள்ளைகளும் ஒன்றை நினைத்து வேறொன்றுசெய்கிறார்கள். உறியிற் தயிரிருக்க ஊரெங்குந்தேடித் திரிவார் பலருண்டு. எப்பொழுதும் ஞாபகமுள்ளவர்களாகவிருக்கப்பாருங்கள்.



கழுகு.

இராசாளி, பருந்து, வல்லூறு, கழுகு முதலியவைகள் ஓரினப்பட்சி. அவைகளின் தொழில் சூறையாடுதல். பருத்த உரத்த உடலும், துணிகரமான மூர்க்கக் குணமுமுள்ளவைகள். மிக விரைவாகப் பறக்கும். அவைகளின் சொண்டு கத்தியைப்போற் கருக்காகவிருக்கும். நகம் மிகக் கூர்மையுள்ளது. இவைகள் இரக்கமற்றவைகள்.

பொன்மயமான கழுகு மூன்றடி நீளமுள்ளது, வெண்கழுகுகளும் ஏறக்குறைய மூன்றரை நீளமாயிருக்கும். இவைகள் ஆகாயத்தில் வெகுதூரத்துக்குப் பறந்து கண்ணுக்கெட்டாத இடத்தில் நின்று வட்டமிட்டு இரையைக் கண்டவுடன் சிறகொடுக்கிச் சட்டெனக் கீழேவிழுந்து இருஞ்சிக்கொண்டுபோம். முயல், ஆட்டுக்குட்டி, மான்கன்று, கரிக்குட்டிகளை மிகவேதுவாகக் கொண்டுபோம்.

இராசாளி, பருந்து, வல்லூறு முதலியவைகள், மீன், பாம்பு, கோழிக்குஞ்சு முதலியவைகளை இருஞ்சித்தின்னும். பெரும்பாலும் இவ்வினங்கள் செத்த சாதின எவ்வுடலையும் இஷ்டமாகத்தின்னும். பிணம் எங்கேயோ கழுகுகள் அங்கே சேரும் என்று எங்கள் இரட்சகர் சொல்லுகிறார், கழுகின் சிறகைச் செதிக்கு ஒப்பிட்டுப் பேசப்படும். சிலர் இந்துதேசத்திலும் மற்றுமிடங்களிலும் வல்லூறு முதலிய பட்சிகளைப்பிடித்து வளர்த்து மற்றும் புரு முதலிய பட்சிகளை அடித்து விழுத்தும்படி பயிற்றுவித்து அவைகளைத் தங்களுக்கு உணவாக்குகிறார்கள்.

மனுஷரிற் சிலர் சூறையாடிப் பொருள்களைப் பறிப்பதுபோல இவைகளும் பகலிற் கொள்ளையாடும். இவைகளைப்பற்றி யோப்பு. ௩௯ம் அதி. சொல்லியிருப்பதை வாசியுங்கள்.

## கழுகும் பிள்ளையும்.

ஸ்கொத்திலாந்து தேசத்தில் உயர்ந்த மலைகள் பலவுண்டு. இமைகளின் சிகரங்களில் கழுகுகள் தங்கள் கூடுகளைக் கட்டும். அவை மிகப் பெலப்புள்ளவைகளாக விருக்கும். வயல்வெளிகளில் சனங்கள் வைக்கோற் கட்டுகையில் ஒருசிறுபாலன் நித்திரையானதால் மாதா அதை வைக்கோற்கட்டின்மேல் வளர்த்திவிட்டாள். ஆகாயத்தில் வட்டமிட்டு நின்ற ஒரு கழுகானது, திடீரெனக் கீழேவிழுந்து பாலனின் சட்டையில் தன் வலியநகங்களை மாட்டி, பிள்ளையை இருஞ்சிக்கொண்டு பறந்து தன்கூட்டுக்குக்கொண்டுபோய் விட்டது. சனங்கள் இத்தன்மையைப் பார்த்துக் கொண்டு பயத்துடன் நின்றார்கள். அநேகர் தங்கள் வாய்களிற் கை வைத்து, ஐயோ! ஐயோ! என்று அலறினார்கள். அவ்வேளையில்கப்பலில் வேலையாகவிருந்த ஒரு கிலாசுகாரன் தான் செங்குத்து மலையில் ஏறவேணென்று துணிந்து சற்றுத்தூரம் ஏற, அந்தப் பாலனின் மாதா அரிவிகொய்யும் கூன்வாளாகிய அரிவாளையும் எடுத்துக்கொண்டு உச்சாகத்துடன் ஏறினாள். அவன் மிகப் பெலட்சயப்பட்டவனாகவிருந்தும் கிலாஸ்காரனை முந்திவிட்டாள். தன் கால்மிதிக்க வளமில்லாதவிடங்களிற் புல்வேர்களில் மிதித்து ஏறினாள். தன் பிள்ளையில் அவளுக்கிருந்த கரிசனை அவளுக்கு மிகுந்த தைரியத்தை உண்டாக்கினது. தேவனும் அவளின் கால்களை ஸ்திரப்படுத்தினார். இவள் மலையின் சிகரத்திற்சேர்ந்த உடன் எல்லோர் கண்களும் அவளை நோக்கின. கழுகு அவளுக்கு மோசஞ் செய்யுமென்று பார்த்தார்கள். அவள் கூட்டின் பக்கலிற் சேர்ந்தவுடன் கழுகு கீச்சிட்டு வட்டமிட்டு மேலே பறந்துகின்றது. பிள்ளையானது கழுகின் குஞ்சுகளுடன் பல ஓலுப்புகளுக்கிடையே படுத்திருந்தது. பிள்ளையைத் தங்கள் இரையாக இன்னுங் கொத்திப் பிடுங்கவில்லை. தாயானவள் அரிவாளினால் பெருங்கழுகைத் துரத்தி சால்வையின் பிள்ளையை வளர்த்தி தன் அரையிற் கட்டிக்கொண்டு இறங்கினாள். அவள் இறங்குவது மிக வருத்தமாகவிருந்தது. அவள் மெத்த வருத்தத்துடன் பாதிவழிசேர, ஒரு ஆடானது தனதிரண்டு குட்டிகளுடன் பள்ளத்தாக்குக்குக் கூடிப்போவதைக் கண்டு, லெகுவழியென உணர்ந்து அதைப் பின்றொடர்ந்தாள். அப்பொழுது அவள் இனத்தாரும் பாதிவழியில் அவளைச் சந்தித்தார்கள்.

அவளைக் கண்டவுடன் எல்லவரும் சந்தோஷிக்க, அன்னையர் பலர் பிள்ளையைத் தங்கள் கைகளில் ஏந்த, இங்கேதா பிள்ளையை, என்று பலர் வாயில் நின்று பிறக்க ஆர்ப்பரித்தார்கள்.

தன் பிள்ளையை இரட்சிக்க ஒருமாதா என்ன செய்வாள் என்பதை பிள்ளைகளே, உற்றுணருங்கள். உங்களிற் பலரை மாதாமார் எப்படிப் பராமரித்தார்கள் என்பதை இச்சரித்திரத்தால் அறியலாம். உங்களைச் சீராட்டித், தாராட்டி, ஓராட்டிக், கண்விழித்து அல்லும் பகலும் உங்கள்மேற் சிந்தைவைத்து தங்கள் உயிரையுந் துரும்பென நினையாமல் உங்கள் துன்பதுயரங்களிற் தங்களை ஒறுத்துவந்த தாய்மாரை எப்படி நடத்துகிறீர்கள்? அவர்கள் சொற்கேட்டுநடக்கிறீர்களா? அல்லவென்று இழடி பேசாதே, என்புத்தி எனக்குத்தெரியும் என்று சொல்லுகிறீர்களா? மாதாமாரிலும் அதிகவிழிப்பாக ஒருக்காலுந் தூங்காத உங்கள் யேசு உங்களை நேசித்து "குழந்தைகளை என்னிடத்தில் வரவிடுங்கள்" என்று சொல்ல, நீங்கள் அவர்சொல்லைக் கேளாமற் போகிறதென்ன?

## அன்புடன் கேட்டல்.

ஒருவாலிபன் வியாதிக்காரனாக வெகுநாட் கிடந்து தன் கையிலுள்ள பணமெல்லாவற்றையுஞ் செலவிட்டு ஈற்றில் மெத்த முட்டுப்பட்டவனாகப் பலரிடத்திலும் தன் வருத்தமானத்தைச்சொல்லிப் பணங் கடன்கேட்பான். அநேகர் அவன் காரியங்களை முற்றமுடியக் கேளாமல்போய்விடுவார்கள். ஒருநாள் ஒருவர் அவன் விருத்தாந்தங்களை முழுவதும் அன்புடன் கேட்டு ஒருபை நிரம்பினபணத்தை அவனுக்குக் கொடுத்தார். உடனே அவன் அவருக்கு உபகாரஞ்சொல்லி, ஐயா தயவுபண்ணி உமது நாமத்தைச் சொல்லவேண்டும். நான் சுகப்பட்டு எழும்பி உழைத்து உமது கடனை இறுக்கவேண்டுமென்றான். அதற்கு அவர் என்பேரை நீ அறியவேண்டியதில்லை; உன் வாழ்நாளில் முட்டுப்பட்டவர்க்கு உதவிசெய்து என் கடனைத்தீர்த்துப்போடென்றார்.

ஆனால் அந்த வாலிபன் சுகமடைந்ததின்மேல்மிகவும் பணக்காரனாகவும் அநேகசிநேகிதருள்ளவனாகவுமிருந்தும் தான் பெற்ற தயவை கமதுராரபோல மறந்துவிடாமல் அவனிடத்திற் சகாயம்பெறவரும் எவருக்குந் தாராளமாயிறைப்பான். அநாதரும் வறியவர்களும் அவன் வாசலில்வந்து வெறுங்கையுடன் போனதில்லை. அவன் பட்டிருந்த கடனை வட்டிக்கு மேல்வட்டியாக இறுத்தும் இன்னுந் தன் கடன் நீங்கவில்லையென்றான். இவனுக்கு உதவின தயாளு இவன் செய்கையைப்பற்றிக் கேள்விப்படாதிருந்தும் தயாளுவினிமித்தமே பலர் சகாயமடைந்தார்கள். ஏழைக்கிரங்குவோன் தேவனிடத்திற் கடன்கொடுக்கிறான். பிள்ளைகளே நீங்கள் இந்த முன்மாதிரியைப் பின்பற்றி தேவனுடைய வாக்கையும் அலட்சியம்செய்யாமற் கவனித்துக்கேட்டு அவரவர் தகுதிக்குத்தக்கதாய் நடப்பீர்களாகில் ஒருவனுக்கல்லப் பலருக்கு நன்மைசெய்வீர்களென நம்புங்கள்.

## சத்துருவை நேசி.

ஒரு பள்ளிக்கூடத்திலுள்ள தலைமிர்த்த ஒரு பையன் சிறு பிள்ளைகள் எல்லாரையும் திட்டி ஏசி வருவான். அதினால் உவாத்தியார் அவனைப் பள்ளிக்கூடத்தை விட்டுத் துரத்திவிட மனங்கொண்டு பிள்ளைகளின் சம்மதியைக் கேட்டார். எல்லாரும் அவனை நீக்கிவிடச் சம்மதஞ்சொன்னார்கள். ஐந்து வயதுள்ள ஒரு பையன்மாத்திரஞ் சம்மதிக்கவில்லை. அவன் பள்ளிக்கூடத்திலிருந்தால் இன்னுந் தன்னை ஏசுவானென்று அறிந்தும் அவனைத் துரத்தச் சம்மதிக்கவில்லை. உவாத்தியார் ஏன் நீ சம்மதிக்கவில்லையென்ன அவன் தள்ளப்பட்டால் தேவனைப்பற்றிப் படிப்பதற்கு இடமில்லை. அவன் அதிகங் கெட்டவனாவான். இதினாற்றான் சம்மதிக்கவில்லை என்றான். தேவன் என் குற்றத்தை மன்னிக்கில் நானும் மன்னிக்கவேண்டும். என்றான்.



## தீக்கால் மலை.

தீக்கால் மலை அல்லது அக்கினிமலை பூமிக்குள்ளிருக்கும் அக்கினியை வெளியிற் கக்கும். மலை முழுவதும் அக்கினியென்று சொல்வதல்ல. உலகத்தில் பலவிடங்களிலும் இம்மலையுண்டு. தென் அமரிக்காவிலுள்ள அந்திஸ் (The Andes) மலையில் கோற்றோபாக்கிஸ் (Cotopaxi) ம் சிசிலித்தீவில் எற்னா (Etna) வும் இத்தாலியில் விசுவியஸ் (Vesuvius) ஐசிலாந்தில் எக்கிலா (Heckla) வும் விசேஷித்தவை.

எற்னாமலை பெரும்பாலும் தீ கக்கிக்கொண்டிருக்கின்றது. சிசிலித்தீவின் தென்கரையில் தண்ணீர் மிகவும் ஆழமுள்ள கடலில் ஒருமுறை அக்கினி சுவாலித்து எரிகிறதைச் சனங்கள் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். இவ்விதமாகப் பலநாட்களாக எ[illegible] பீரங்கிச்சத்தம் போலப் படபட வென்று வெடித்துக்கொண்டிருந்தது. அதிலிருந்தெழும்பிய சாம்பற்படலங்களும் புகைப்படலங்களுஞ் சூரியனின் ஒளியை மறைத்தன. அதின் சுவாலை தணிந்து நாருங்காலத்தில் சனங்கள் அதைப் போய்ப் பார்த்தவிடத்தில் ஒரு பெருந்தீவு உண்டுபட்டிருக்கிறதாகவும் அவ்விடத்திலுள்ள குழிகளிற் சுடுநீர் இருக்கிறதாகவுங் கண்டார்கள். இறந்த மீன்களுங் குவியல்களாகக் கிடந்தன. கெந்தககாற்றம் மிகுதியாகவிருந்தது. கொஞ்சநாளையிற் பிறகு மறுபடியும் அத்தீவு தண்ணீருக்குள் தாழ்ந்துவிட்டது.

ஒருவர் எற்னாமலையிலுள்ள அக்கினிப் பிளவை ஏறிப் பார்த்தபொழுது தான் ஏறும்படி பட்ட வருத்தம் இளைப்பு முதலியவைகளை மறந்துவிட வந்ததென்கிறார். அநேக ஆயிரம் வருஷங்களாக அக்கினியைக் கக்கின அந்த வாயைப் பார்த்தபொழுது அளவிடக்கூடாத தாழ்வுள்ளதாகவும் இரண்டு மூன்று மைல் விட்டமுள்ளதாகவுங் காணப்பட்டது. பிளவின் அடியிலிருந்து வெண்புகை எழும்பிக்கொண்டிருந்தது. பிளவின் பக்கங்கள் பாறை நிறைந்ததாகவும் சிவப்பு மஞ்சல் கருமை நிறமுள்ள கெந்தகக் கட்டிகளுள்ளதாகவுமிருந்தது. தன் காலுக்குச் சமீபமாயிருந்த ஒரு வெடிப்பில் தனது தடியை விட்டவுடன் நெருப்பு பற்றினது.

இப்படி மேலேநின்று பார்த்ததுமன்றி தன்னுயிரையும் பேணாமல் உள்ளுக்கிறங்கினார். இறங்கி இறங்கிப் போகையில் தன் கோலை முன்னூன்றி நடந்தார். இறங்குகையில் கெந்தக மணம் அதிகமாக வீசின. அதுவுமன்றி ஒரு கல்லும் மேலே எழும்பினது. ஆறு போக அநிகம் கெந்தகமணம் உண்டுபட்டு மூச்சு விடக் கூடாததினால் திரும்பினார்.

பிள்ளைகளே, கடைசிகாலில் பூமி எரிந்த அழிந்துபோம். பூமியங்கள் வெந்துபோமென்று வேதஞ் சொல்லும் வாக்கை இம்மலைகள் உறுதிப்படுத்தவில்லையா? திருடனைப்போல் வருவார் விழித்துக்கொள்ளுங்கள்.

## நன்றியீனன்.

ஒரு செம்படவன் தூண்டில்போட்டு நிற்கையில் பின்னொருவன் தண்ணீருக்குள் விழுந்ததைக்கண்டான். உடனே அவனைத் தூக்கி எடுக்கவேண்டுமென்ற பேராசைகொண்டு அவ்விடத்திற்கு ஓடி தூண்டில் அவன் வஸ்திரத்தில் கொழுவும்படி செய்து மிருந்த வருத்தத்துடன் அவன் உயிரைக் காப்பாற்றினான். ஆனால் தூண்டிலால் ஆராய்ந்து தேடுகையில் தெரியாதபடி அவன் கண் ஒன்று இடை பூறுபட்டது. இரட்சிக்கப்பட்டவன் இவனுக்கு அறிமுகமுள்ளவனாகவிருந்ததினால் தன் வீட்டுக்குக் கூட்டிப்போய் அவன் சுகமடையும் வரைக்கும் வேண்டிய போசனங்களைக் கொடுத்துக் காப்பாற்றினான். சுகமடைந்து வீட்டைவிட்டுப் புறப்பட்டவுடன் தன்கண்ணை செம்படவன் கெடுத்துப் போட்டதென்று நீதிஸ்தலத்தில் முறையிட்டுப் பிராதுசெய்தான். அவ்வேளையில் நகராதிகாரி இருவரையுமழைத்து விளக்கி தீர்வை சொல்வதற்கு மிகவும் முட்டுப்பட்டார். அத்தருணத்தில் அவ்விடம் நின்ற ஓர்மூடன், நீதியதிபதியே! என்ன முட்டுப்படுகிறீர்? இதற்குத் தீர்ப்புவாசிக்கத் தெரியாதா? லெகுவாக நான் நல்லதீர்வை சொல்லுகிறேன். செம்படவன் தன்கண்ணைக் கெடுத்துப்போட்டானென்றே முறைப்பாடுபண்ணுகிறான். நல்லது இவன் தண்ணீருக்குள் விழுந்த இடத்தில் மறுபடி இவனைக் கொண்டுபோய்ப் போடுங்கள். இவன் தான் தானே தப்பிவருவானாகில் செம்படவன் அவனுக்குவந்த கஷ்டத்தை இறக்கவேண்டும். அப்படி அவன் வரக்கூடாதிருக்கில் அவனை அவ்விடத்திற்றானே விட்டு செம்படவன் அவனை முன்தூக்கி எடுத்ததற்கு உபகாரங் கொடுங்கள், என்றான்.

இத்தீர்ப்பு மெத்த உத்தமந்தானென்று நகராதிகாரியும் விரைந்து கொண்டார். சீமிலாக வழக்காடவிருந்தவன் இத்தீர்ப்பு நிறைவேறுமோவெனப்பயந்து தன்வழக்கை விட்டுவிட்டான்.

நன்றிமறந்திற்காகத் தீர்க்கப்பட்ட கன்னனை இரட்சி; காலைக்கு அவன் உன்வீட்டைக் கண்ணமிடாதிருக்கில் நீ அதிஷ்டசாலி. நற்சனரிடம் அதில்லை. நற்சனர் எவ்விடஞ்சென்றாலும் துரையாகார். பாம்புக்குப் பால்கொடுத்தாலும் படுவிஷத்தைத் தொங்கும் துற்சனர் சற்சனராவதற்குக் கிறிஸ்துவின் கிருபையண்டை சேரவேண்டும்.

## வெடிமருந்து.

வெடிமருந்து கண்டுபிடிக்கப்பட்ட விதம் எவ்விதமென்று அறிவீர்களா? ஒரு வைத்திய மருந்துச்சரக்குகளைப் பலவகையாகச் சேர்த்து மருந்துண்டாக்குவான். ஒருநாளாகும் பொழுது சில சரக்குகளைச்சேர்த்து உரலிலிடித்துத் துணிக்கினதின்மேல், வெளிச்சந்தேவையானதினால் உரல்வாயில் ஒரு கல்லை மேலாக வைத்துவிட்டு வெளிச்சம் உண்டாக்குகையில் நெருப்புப்பொறி உரற்குள்விழ திடீரென வெடிச்சத்தங்கேட்க உரல்வாயிலிருந்த கல்லு மேலே பறக்கக்கண்டதினால் வெடிமருந்துண்டுபடவும் பீரங்கி பாவிக்கவும் ஏதுவானது. இது ஏறக்குறைய ஐநூறு வருஷத்திற்கு முன் கண்டு பிடிக்கப்பட்டது. கிறிஸ்துவின்பின் நூறாவது வருஷத்திற் கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வெடிமருந்தினால் முன் யுத்தத்திற் பயின்று வந்த வில் வாள் வேல் சூலம் முதலிய படைக்கலங்கள் இப்பொழுது பாவிக்கப்படவில்லை. இவைகள் ஒழிந்துபோருங்காலம் வருமென்று தேவன் சொல்லுகிறார். "அவர்கள் தங்கள் கட்கங்களை கொழுக்களும் தங்கள் ஈட்டிகளை அரிவாள்களுமாக்குவார்கள். ஒரு தேசத்தார் மறுதேசத்தாருக்கு விரோதமாகக் கட்கத்தை ஓங்கார்கள். இனி அவர்கள் யுத்தப்பயிற்சிசெய்யார்கள்." பிள்ளைகளே இப்படிக்கொத்த காலத்தில் ஜிப்போர் எவ்வளவு சலாக்கியமுள்ளவர்கள். யுத்தம் யுத்தமென்றஞ்சாமல் முத்தம் முத்தமென்று கொஞ்சுவார்கள்.

## களவுபோன மோதிரம்.

Magpie மாக்குபாய் என்னுங் குருவி ஆபரணங்களை எடுக்கிறதற்கு மிகவும் விருப்பமுள்ளது. காகம் பெரும்புரளியுள்ளது. எவ்விடத்திலாகுதல் யாதொரு நகை ஆபரணங்களைக்கண்டால் உடனே எடுத்துக்கொண்டு பறந்து கண்ணுக்கு எட்டாமல் அதனைக்களைச் சேகரித்து வைக்குமிடத்திற் பத்திரமாகவைக்கும். எலிகளுந் தங்கள் பசிக்கைக்காகுதல் உணவுக்காகுதல் கூடாத பொருள்களையும் எடுத்துக்கொண்டு போகின்றன. உங்கள் புத்தகசாலையில் அல்லது வஸ்திரப்பெட்டியில் அவைகள் புகுந்தால் அதி உச்சிதப்பொருள்களைக் கெடுத்துப்போடும். எலிகள் இப்படிச் செய்கிற நோக்கம் என்னவென்று விசாரிக்கில் அவைகளை மெத்தையாக்கிச் சொகுசாகப் படுப்பதற்கென்று சொல்லும். ஆனால் நகை யாபாரியின் கடைக்குட் புகுந்து ஒரு பொன் மோதிரத்தைத் திருடுவதற்கு நியாயம் என்னவென்று தெரியவரவில்லை. அப்படியிருக்க கழுத்தில்பொன் மோதிரம் பூண்ட ஒரு எலி பொறியிலகப்பட்டது. ரெச்சேதம் பண்ணினாலன்றி மற்றும்படி அதை எடுப்பது கூடாததாகவிருந்தது. இந்த எலி சிறிதாக இருந்தகாலத்தில் இது இருந்த கூட்டில் அந்த மோதிரமிருந்திருக்கவேண்டும். குஞ்சாகவிருக்கையில் தன்தலையை அதற்குள் மாட்டியிருக்கவேண்டும். எலி பருக்கப்பருக்க மோதிரம் பருக்கக்கூடாததினால் எலிக்கு அது வில்லங்கமாகவிருந்தது. ஆனால் நகைக்காரன் மோதிரத்தைக்கழற்றி விடாமல் எலியின் தோலை உரித்து தோலுக்குள் சிலசாமான்களைச் செருகிவைத்திருந்தான். அக்கடையிலிருந்து பலமுறைகளிலும பலநகைகள் காணமற்போயின, அதினாற் பலரிலும் அசுகைகொள்ளவேண்டியிருந்தது. இவைகளெல்லாவற்றையுந் தாய் எலியே களவாண்டு தன்வளையில் வைத்திருந்தது. உன் அறையிற் சில காணுதவேளைகளில் பலரிலும் ஐயங்கொள்ளாதே. சோதி திரவியத்திலும் நற்கீர்த்தியே உத்தமம். பொன்னிலும் வெள்ளியிலும் நற்பேரேமேன்மை.

## பூமிசாஸ்திரக்கேள்வி.

அம்ஸ்டேடம் (Amsterdum) எந்த இராச்சியத்துக்கு இராசதானி? நெதலாண்டு. (The Netherlands)

நெதலாண்டு என ஏன் சொல்லுவார்? கடலின் நீர்மட்டத்துக்குக் கீழேயிருக்கிறது.

நெதலாண்டார் எதினால் விசேஷித்தவர்கள்? அவர்கள் நேர்த்தியாக விருப்பதினால்.

ஐரோப்பாவில் லொந்தனுக்குஇரண்டாவதான நகரி எது? பாரிஸ். (Paris)

பாரிஸ் எதின் இராசதானி? பிரான்ஸ். (France)

பிரான்ஸகாரர் எதினாலேவிசேஷித்தவர்கள்? உல்லாசம், ரோப்பு முதலியவைகளுக்காக.

அவர்கள் எதில் அதிக விருப்புள்ளவர்கள்? நடனநாட்டியத்தில்.

பிரான்ஸ மலைநாடா? இல்லை, ஒப்புரவுள்ள தேசம்.

பிரான்ஸையும் இங்கிலாந்தையும் பிரிப்பதென்ன? பிரிட்டிஷ் வாய்க்கால்.

பிரான்ஸிலிருந்து பிரதான ஏற்றுமதி என்ன? திராட்சரசம். (Wine)

பிரான்ஸையும் ஸ்பேனையும் பிரிக்கிறமலை என்ன? பீரெனீஸ். (Pyrenees)

C. M.

"Ye shall find rest."

## இளைப்பாறுதல்.

யேசு.

௧. பாவி, இளைத்துச், சோகத்தில்
மூச்சற்றுப், போனாயே
என் அண்டை வா, என் மடியில்
உன் தலை சாயச் செய்.

சீஷன்.

௨. இளைத்துத் துக்கத்தோடேயும்
அவ் வாக்கைக் கேட்கையில்,
ஆ! யேசுவே, கண்ணீரோடும்
வந்தேன் நின் வசத்தில்.

யேசு.

௩. கைமாறில்லாமல் ஜீவ நீர்
கொடுப்பேன் ஏழையே,
பானம்பண்ணு,-ஆனந்த சீர்
கிடைக்கும் உனக்கே.

சீஷன்.

௪. நித்திய பானம் பண்ணினேன்,
என் தாகந் தீர்ந்தது,
யேசுவில் நான் ஜீவிக்கிறேன்,
பூர்த்தி கிடைத்தது.

யேசு.

௫. பூலோக சோதி, ஜீவன், நான்,
நீ வா, என் அண்டையில்,
வந்தேவனே என்றுஞ் சாகான்,
பூர்த்தி, என் சோதியில்.

சீஷன்.

௬. யேசுவை நோக்கிப், பார்க்கையில்,
சீர் கொண்டேன், களிப்பாய்,
முடியும் மட்டும், வழியில்
நான் கீர்த்திப்பேன், அன்பாய்.

## சத்தியவேதக்கேள்வி.

௰௪ம் பாடம்.

௧. தேவாலயத்துக்கு வேண்டிய தளபாடங்களையுந் திரவியங்களையுஞ் சேகரித்து வைத்ததார்? ௧. நாளா. ௨௨: ௧—௫

௨. அது எவ்விடத்திற் கட்டப்பட்டது? ௨. நாளா. ௩: ௧.

௩. அதின் அஸ்திவாரம் போடப்பட்டதெப்போ, அது கட்டிமுடிந்தது எப்போ?

இஸ்ரவேலர் எகிப்தைவிட்டுப் புறப்பட்டதின்பின் ௪௱௮௰ வருஷத்தின்பின்னும் சலோமோன் அரசாண்ட நாலாம்வருஷத்தில் அஸ்திபாரம்போட்டு ஏழுவருஷத்திற் பின்னும் கட்டி நிறைவேற்றினார்கள். ௧. இரா. ௬: ௧. ௩௭: ௩௮.

௪. தேவாலயத்தைப் பிரதிஷ்டை செய்ததார்? ௧. இரா. ௮: ௨. நாளா. ௬: ௭.

௫. அந்நேரத்தில் செலுத்தப்பட்ட பலிகள் என்ன? ௧. இரா. ௮: ௨. நாளா. ௬: ௭.

௬. தேவன் அவ்விடத்தில் இருக்கிறாரென்பதை என்னகாட்டினது? ௧ இரா. ௮: ௨. நாளா. ௭.

௭. தேவாலயத்தைக் கொள்ளையிட்டு, பொற்கேடகங்களைக் கொண்டுபோனதார்? ௧. இரா. ௰௪: ௨௫, ௨௬.

௮. அது ஆரால் எப்பொழுது நாசமாக்கப்பட்டது? ௨. இரா. ௨௫: ௧—௰.

௯. இரண்டாம் ஆலயத்தின் அஸ்திபாரம் ஆரால் எப்பொழுது போடப்பட்டது?

முதலாந் தேவாலயம் நாசமாக்கப்பட்டு ௫௨ வருஷத்துக்குப்பின். எஸ்று ௩: ௧, ௯.

௰. சந்தோஷத்துடனும் புலம்பலுடனும் என்னின்றார்கள்? எஸ்று ௩: ௰௨, ௰௩. ஆகா. ௨: ௩.

## பெற்றோருக்கு ஓர் வார்த்தை.

பெற்றோரே, உங்கள் பிள்ளைகளைக் குறித்து நீங்கள் உத்தரவாதிகளாயிருக்கிறீர்கள். இம்மை மறுமையென்னும் இரண்டு ஸ்தலத்திலும் தமக்குத் தொண்டுசெய்யும்படி உங்கள் பிள்ளைகளைப் பயிற்ற தேவன் அவர்களை உங்கள் கையில் ஒப்புவித்தார். இவ் விலைபெற்ற இரத்தினங்களை உங்களிடம் தருகிறேன், இரட்சகர்பெருமானின் முடியில் இரத்தினங்கள் போல ஒளி காலும்படிக்கும் மோட்சமண்டலத்தில் பரிசுத்தமுள்ள ஆன்மாவாகவாழும்படிக்கும் இவர்களைப் பயிற்றிப் பழக்குங்களென்கிறார். இச்சீவியத்தின் நிலையற்ற சந்தோஷத்தைத் தரும் வஸ்திராபரணங்களால் அலங்கரிக்கவும் இகத்துக்குரிய கல்விகளை மாத்திரங் கற்றுக்கொடுக்கும்படிக்குமல்ல, பரத்தில் பரிசுத்தராகவிருக்கவும் ஆனந்தக்களிப்புள்ளவர்களாகவிருக்கவுங் கற்றுக்கொடுக்கும்படிக்கே உங்கள் கையிலொப்புவித்தார். இந்நோக்கம் நிதமும் உங்கள் எண்ணத்திலிருக்கிறதா? பரத்துக்கென்றோ இகத்துக்கென்றோ உங்கள் பிள்ளைகளைவளர்க்கிறீர்கள்? பேயின் ஊழியத்துக்கோ யேசுவின் ஊழியத்துக்கோ வளர்க்கிறீர்கள்? தேவனைக் கனம்பண்ணவோ கனவீனம்பண்ணவோ பழக்குகிறீர்கள்? உலக இன்பங்களைச் சிலநாளைக்கு அநுபவித்து என்றென்றும் நரகத்தில் வீழ்த்தும்படிக்கோ அல்லது அனவரதகாலம் பேரின்பத்தை மோட்சத்தில் அநுபவிக்கும்படி முத்தி இரட்சிப்பைத் தேடும்படிக்கோ பயிற்றுகிறீர்கள்? கிறிஸ்தப் பெற்றோரே, இதை நினையுங்கள். உங்கள் பிள்ளைகளுக்காக என்ன செய்கிறீர்கள்? உங்கள் உக்கிராணக் கணக்கை எவ்வகையாகக் கொடுக்க எத்தனிக்கிறீர்கள்? வருஷத் துவக்கத்திற்றானே தீர்த்துக்கொள்ளுங்கள். உங்கள் நகை, பணம், வஸ்திரம், பொருள், காணி, பூமி என்பவைகளுக்கு ஒரு நஷ்டம் வராமற் காப்பதுபோல உங்கள் பிள்ளைகளைக்குறித்து ஏன் காக்கவில்லை? பிள்ளைகளோ நகைகளோ அருமை?

## பிள்ளைகளை வளர்த்தல்.

மாதாமாரே, உங்கள் பிள்ளைகள் எப்படியிருக்கவிரும்புகிறீர்களோ, அவ்வண்ணமேநீங்களுமிருங்கள். அவர்கள் சந்தோஷம், சுகம், சொஸ்த புத்தி, கரிசனை, நேர்மை, நாணயம், தேவபத்தியுள்ளவர்களாகவிரும்புகில், அவ்விதமே நீங்களுமிருங்கள். ஒரு பிள்ளை நடக்கவேண்டிய வழியில் அவனை நடத்து, அவன் முதிரும்போது அதை விடான் என்பதை நினைவுகூருங்கள். முட்செடிகளிற் திராட்சப்பழத்தையும் முட்பூண்டுகளில் அத்திப்பழங்களையும் காணலாமா? வியாதியுள்ள சோம்புத்தனமான துஷ்ட பெற்றோரிடம் நன்மையும் சுகமும் சந்தோஷமுமுள்ள பிள்ளைகள் உண்டாவார்களா? உங்கள் பிள்ளைகளுடன் சுருக்குச்சுருட்டில்லாமற் காலம்விடுங்கள். உங்களை நம்பி தங்கள் இரகசியங்களைச் சொல்ல இடங்கொடுங்கள். ஒரு கதையைக் கேளுங்கள். ஒருவன் சில பிள்ளைகளையுங் கூட்டிக்கொண்டு வாடிக்கையாக நடக்கவேண்டிய இடத்துக்கப்பாற் போனான். எல்லாரும் மிகவுந் தொய்ந்ததால் எங்களைச் சுமந்துகொண்டு போகவேண்டுமென்றார்கள். அவர்கள் கனபேரானதால் அவனாற் கூடாது; நல்லது நாங்கள் ஏறிப்போகக் குதிரை கொண்டுவருகிறேனென்று சொல்லி வேலிகளிலுள்ள தடிகளை வெட்டி தனக்கும் ஒரு பெருந்தடியை வெட்டி இவைகளிலேறிக்கொண்டு பாய்ந்து வீட்டுக்குப் போவோமென்று அப்படிச்செய்து வீடுசேர்ந்தார்கள். இதுபோலச் செய்யக்கூடாத காரியங்கள் வரும்போது சிலவேளை பகிடிபண்ணிச் செய்வியுங்கள்.

## குதிரையும் குதிரைக்காரனும்.

குதிரைக்காரன் குதிரையை அவிழ்த்து வெளிகளில் மேயவிடுவான். அதை மறுபடி பிடித்து லாயத்தில் கட்டும்படி போனவிடத்தில் லாயத்தில் கட்டப்பட்டு நிற்பதிலும் ஓடி உலாவிப் பாய்ந்து திரிவது உத்தமமென்றெண்ணி அவனுக்குச் சமீபத்தில் வரவில்லை. இதைப் பிடிப்பது கூடாதென்று குதிரைக்காரன் கண்டு கொள்ளுப்போட்டுக் கட்டுந் தோப்பறுவை எடுத்துவந்து அதற்குக் காட்டினான். குதிரை தோப்பறுவைக் கண்டவுடன் கொள்ளு இருக்கிறதென எண்ணி அவனிடத்திற் சேர்ந்தது. உடனே அவன் பிடித்து லாயத்திற் கட்டிப் போட்டான்.

பின்னும் ஒருநாள் அதை அவிழ்த்து வெளியே விட்டான். அப்பொழுதும் அவன் அதைப் பிடிக்கக்கூடாமற்போயிற்று. அன்றைக்குந் தோப்பறுவை எடுத்துக்கொண்டுவந்து காட்ட குதிரை தலையை அசைத்து இல்லை, நான் வரமாட்டேன், நீ அன்றைக்குப் பொய்சொன்னாய். இரண்டாந்தரம் நீ என்னை ஏய்ப்பதற்கு நான் மடையனல்ல என்ற பாவனைபோற் காட்ட, குதிரைக்காரன் நான் பொய் சொல்லவில்லை, தோப்பறுவைக் கையில் வைத்திருந்தேன், அதற்குள் கொள்ளிருக்கிறதென்று நான் சொல்லவில்லை, நீயல்லவா கொள்ளிருக்கிறது என்றெண்ணி வந்தாயென்பதுபோற் பேசினான். அதற்குக் குதிரை நீ சொல்லுஞ் சாட்டு என்னை ஏய்த்ததிலும்பார்க்க மிகவுங் கேடு. நீ கையில் தோப்பறுவை வைத்திருந்தது இந்தா கொள்ளு இருக்கிறதென்பதற்குச் சரியல்லவா வென்றது.

படிப்பினை. வார்த்தைகளைப் போலவே செய்கையுந் தொனிக்கின்றது. வார்த்தையாற்பேசி ஏயாமற் செய்கையால் ஏய்ப்பது வார்த்தையாற் பேசினதுபோலப் பொய்யாகவிருக்கின்றது. ஒருமுறை ஏய்க்கப்பட்டவன் மறுமுறை ஏய்க்கப்படான். இவ்வூரில் அநேக பெற்றோர் தங்கள் பிள்ளைகளை ஏய்ப்பது வழப்பம். அவர்களுக்குக் கொடுக்கக்கூடாதவைகளைத் தாங்கள் வைத்துக்கொண்டு காகம் நாய் கொண்டு போய்விட்டதெனப் பாசாங்குபண்ணுகிறார்கள். பிள்ளைகள் தங்களிடம் வராதிருக்கில் தங்களிடத்திலில்லாத பொருள்களின் பேரையும் பிள்ளைகள் விரும்பும் தின்களின் பேரையுஞ் சொல்லி, இந்தா, அப்பம், பண்ணிகாரம், காசு என்று ஏய்க்கிறார்கள். இது நற்பழக்கமல்ல. பிள்ளைகளுக்குப் பொய் போதித்து அவர்களையும் உங்களையும் நரகத்துக்கு ஆளாக்குகிறீர்கள்?

## மற்றவர்களைச் சந்தோஷிப்பித்தல்.

ஒரு மாதா தன் பிள்ளைகள் நித்திரைக்குப் போவதற்குமுன், அவர்களை நோக்கி மக்களே நீங்கள் இன்றைக்கு மற்றவர்களுக்குச் சந்தோஷத்தையுண்டாக்கும்படி என்ன செய்தீர்களென்று கேட்பது வாடிக்கை. அப்படி ஒருநாட் கேட்கையில் அவளுடைய இரண்டு பிள்ளைகளும் ஒன்றும் பேசவில்லை. மறுபடியும் அந்தக் கேள்வியைக் கேட்டாள். அப்பொழுது ஒரு பிள்ளை நான் அப்படிச் செய்தேனென்று என் நினைவிலொன்றும் வரவில்லை. ஆனால் என் வகுப்பிற் படித்த ஒரு பிள்ளை தன் பாடங்களைக் கொடுத்து முதற் பிள்ளையாக நின்றதால் புன்னகைகொண்டான். நானும் புன்னகை கொண்டுபோய் அவனை முத்தமிட்டேன். அதினால் நான் நல்லபிள்ளை என்றான். இதுதான் என் ஞாபகத்திலிருக்கிறதென்றான்.

மற்றவன் சற்றே கூசி என்னுடன் கூடப்படித்த ஒரு பிள்ளை தனது தம்பி இறந்ததினால் புத்தகத்தால் தன் முகத்தை மூடி அழுதான். நான் அதைக் கண்டு அநுதாபங்கொண்டு அவன் புத்தகத்தில் என் முகத்தை வைத்து அழுதேன். அவன் என்னை நிமிர்ந்து பார்த்து மனந்தேறி என் கழுத்திற் கைபோட்டு நீ எனக்கு நன்மை செய்தாயென்றான். நான் அவனுக்குச் செய்த நன்மை எதுவென்று தெரியவில்லை என்றான். என் அருமைப் பிள்ளைகளே, என் கைக்குள் வாருங்கள் " அழுகிறவர்களுடன் அழுங்கள் சந்தோஷப்படுகிறவர்களுடன் சந்தோஷப்படுங்கள் " என்றெங்கள் இரட்சகர் சொல்லியிருக்கிறதென்றான்.

Printed and Published for the Youth's Christian Association, by N. Strong, at the Press of Ripley & Strong, Manepy, Jaffna.